# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education
# Northern Province

## மூன்றாம் தவணைப்பரீட்சை 2022 (2023)

| தரம் :- 11 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் Business studies and Accounting | நேரம் :- 3மணித்தியாலம் 10 நிமிடங்கள் |
|---|---|---|
| சுட்டெண்:............................... | 60 T I | |

**கவனிக்க:**

- **எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

**பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 – 5 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

கிராமப்புறப் பாடசாலையான கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோரின் வருமான மட்டமானது குறைவாகக் காணப்பட்டமையினால் தற்போதைய நாட்டின் பொருளாதார பின்னடைவான நிலையில் தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இதனைக் கருத்தில் கொண்ட 'சுடரொளி' விளையாட்டுக் கழகம் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற நன்கொடைகளைப் பயன்படுத்தி ' பாரதி' அச்சகத்திலிருந்து அப்பியாசக் கொப்பிகளைக் கொள்வனவு செய்து மாணவர்களுக்கு இலவசமாக வழங்கி வருகின்றனர்.

1. மேற்படி சம்பவக் கற்கையில் இனங்காணக் கூடிய பிரதான மனித தேவை யாது?
   (1) உணவு (2) கல்வி (3) போக்குவரத்து (4) உடை

2. ஒரு நாட்டு மக்களின் கொள்வனவு சக்தியைத் தீர்மானிக்கும் பிரதான சூழல்க் காரணியாக அமைவது
   (1) இயற்கைச் சூழல் (2) பூகோளமயச் சூழல்
   (3) பொருளாதாரச் சூழல் (4) தொழில் நுட்பச் சூழல்

3. 'பாரதி' அச்சகம் என்ற வணிகத்தை உரிமை அடிப்படையில் வகைப்படுத்தும் போது அது ஒரு
   (1) தனியார் துறையில் பங்குடைமை வணிகமாகும்.
   (2) தனியார் துறையில் தனியாள் வணிகமாகும்.
   (3) பொதுத் துறையில் கூட்டுத்தாபன அமைப்பாகும்.
   (4) தனியார் துறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகும்.

4. பாரதி அச்சகத்தினால் பயன்படுத்தப்படும் மூலப்பொருளான கடதாசி எவ்வகை உற்பத்திக் காரணிக்குள் உள்ளடங்குகின்றது?
   (1) மூலதனம் (2) முயற்சி (3) உழைப்பு (4) நிலம்

5. மேற்கூறிய சம்பவக் கற்கையில் இனங்காணக் கூடிய சேவை உற்பத்தி வணிகங்களாகக் கருதப்படக் கூடியது
   (1) சுடரொளி விளையாட்டுக் கழகம், கலைமகள் வித்தியாலயம்
   (2) பாரதி அச்சகம், விளையாட்டுக் கழகம்
   (3) பாரதி அச்சகம், கலைமகள் வித்தியாலயம்
   (4) பாரதி அச்சகம், நிதி நிறுவனங்கள்

kalvi.lk

6. நிரல் A வணிகம் ஒன்றில் அக்கறை செலுத்தும் நபர்களையும் நிரல் B ஆனது அவர்கள் அக்கறை செலுத்துவதற்கான காரணங்களையும் காட்டுகின்றது. நிரல் A யையும் நிரல் B யையும் தொடர்புபடுத்தினால் கிடைக்கும் சரியான விடையாக அமைவதனைத் தெரிவு செய்க.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. கடன் வழங்கும் நிறுவனம் | P- மூலதனத்தை ஈடுபடுத்தி இலாபத்தை உழைத்தல் |
| 2. முகாமையாளர் | Q - தொழிற் பாதுகாப்பு |
| 3. ஊழியர்கள் | R - கடனை உரிய காலத்தில் மீளப்பெறல் |
| 4. உரிமையாளர் | S – சிறந்த தீர்மானம் எடுத்தல் |

(1) RSPQ (2) QRSP (3) PQRS (4) RSQP

7. இலங்கை துறைமுக அதிகாரசபை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பன எவ்வணிக அமைப்பினுள் அடங்கும்?
(1) கூட்டுத்தாபனம் (2) கூட்டுறவுச்சங்கம் (3) திணைக்களம் (4) அரச கம்பனி

8. பின்வரும் வணிகம் தொடர்பான சட்டங்களில் பங்குடமை வணிகம் ஒன்றுடன் தொடர்புபடாத சட்டம் எது?.
(1) 1890 ஆம் ஆண்டு பங்குடமை கட்டளைச்சட்டம்
(2) 1840 ஆம் ஆண்டு மோசடி தவிர்ப்பு கட்டளைச்சட்டம
(3) 2007 ஆம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச்சட்டம்
(4) 1972 ஆம் ஆண்டு 5ம் இலக்க கூட்டுறவுச்சட்டம்

9. சில்லறை வியாபாரத்தின் பண்பு அல்லாதது.
(1) நுகர்வோனுக்கு மிக அண்மித்ததாக காணப்படல்
(2) ஒப்பீட்டு ரீதியில் பொருளுக்கான அலகு விலை குறைவு
(3) இறுதி நுகர்விற்காக பொருட்களை விற்பனை செய்தல்
(4) பல்வகை பொருட்கள் காணப்படல்

10. காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு எதிர்பார்க்கும் இராகுலன் எனும் முதலீட்டாளர் ஒருவர் ஆரம்பிக்க வேண்டிய கணக்கு
(1) மக்கள் வங்கியில் சேமிப்புக்கணக்கு
(2) தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்புக்கணக்கு
(3) இலங்கை வங்கியில் நடைமுறைக்கணக்கு
(4) தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்புக் கணக்கு

11. காசோலை ஒன்றில் காணப்படும் காந்தமைத் தன்மை கொண்ட பட்டியல் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| A | B | C | D |
|---|---|---|---|
| "155523" | "7010 | 749" | "0004676134" |

மேலே தரப்பட்ட பட்டியலில் A, C ஆகிய எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் இலக்கங்களின் மூலம் எடுத்துக்காட்டப்படுவது
(1) காசோலை இலக்கம், வங்கி இலக்கம்
(2) கணக்கிலக்கம், வங்கிக்கிளை இலக்கம்
(3) காசோலை இலக்கம், வங்கிக்கிளை இலக்கம்
(4) வங்கி இலக்கம், கணக்கிலக்கம்

12. காப்புறுதி சம்பந்தமாக முதலாம் தரப்பினர் …(1)… என அழைக்கப்படும் அதேவேளை இரண்டாம் தரப்பினர் …. (2) …. என அழைக்கப்படுவார்.
மேலே தரப்பட்ட கூற்றில் முறையே (1) மற்றும் (2) ஆகியவற்றுக்கு வரவேண்டிய விடை
(1) காப்புறுதி அளிப்போர், காப்புறுதி செய்வோர்
(2) காப்புறுதி செய்வோர், காப்புறுதி அளிப்போர்
(3) காப்புறுதிக் கம்பனி, காப்புறுதி செய்வோர்
(4) காப்புறுதி அளிப்போர், காப்புறுதிக்கம்பனி

13. அறிவுறுத்தல் பலகையின் மூலம் வெளிக்காட்டப்படும் தொடர்பாடல் ஊடகமாக அமைவது
   (1) எழுத்து மூலமானது
   (2) இலத்தினியல் மூலமானது
   (3) வாய்மொழி மூலமானது
   (4) சமிக்ஞை மற்றும் குறியீடு மூலமானது

14. மருந்துப்பொருட்களைக் கொண்டு செல்லும் ஆகாயவிமானம் ஒன்றின் போக்குவரத்து மூலங்களுக்கான உதாரணங்களை எடுத்துக்காட்டும் விடை
   (1) விமான நிலையம், ஆகாய விமானம், டீசல்
   (2) விமான நிலையம், ஆகாய விமானம், சுப்பர் பெற்றோல்
   (3) துறைமுகம், ஆகாயவிமானம், டீசல்
   (4) விமான நிலையம், ஆகாயவழி, டீசல்

15. நிரல் X இல் முகாமைத்துவப் பணிகளும் நிரல் Y இல் அவ் ஒவ்வொரு பணிகளுக்கான நடவடிக்கைகளும் உள்ளன. X நிரலுடன் Y நிரலை இணைக்கும் போது வரும் விடையைத் தெரிவு செய்க.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. திட்டமிடல் | A – சந்தைப்படுத்தல் முகாமையாளர் விற்பனை ஊழியரை மேற்பார்வை செய்தல் |
| 2. ஒழுங்கமைத்தல் | B – 5% இனால் விற்பனையை உயர்த்த தீர்மானித்தல் |
| 3. நெறிப்படுத்தல் | C – விற்பனை உயர்வு வீதத்தை பரிசீலித்தல் |
| 4. கட்டுப்படுத்தல் | D – விற்பனை உதவியாளர்களை இணைத்துக் கொள்ளல் |

   (1) BADC (2) BCAD (3) BDAC (4) BDCA

16. முதலீடு தொடர்பான தவறான கூற்றைத் தெரிவு செய்க.
   (1) காணிகளில் முதலிடுவதன் மூலம் மூலதன இலாபம் ஈட்டலாம்.
   (2) அரசு நீண்டகால நிதி தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள திறைசேரி உண்டியல்களை வழங்குகின்றன.
   (3) முதலீட்டாளர் ஒருவர் கம்பனி ஒன்றின் சாதாரண பங்குகளை கொள்வனவு செய்வதன் மூலம் அதன் உரிமையாளர் ஆகின்றார்.
   (4) கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் இலங்கை பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் மேற்பார்வை செய்யப்படும்.

17. தனது சேமிப்பில் இருந்து ரூபா 500 000 தொகையையும் வங்கிக்கடனாக பெற்ற ரூபா 250 000 எனும் தொகையையும் முதலீடு செய்து நபரொருவர் ஒரு வணிகத்தை ஆரம்பிக்கும் போது சரியான கணக்கீட்டுச் சமன்பாடாக அமைவது.
   (1) சொத்துக்கள் ரூபா 500 000 = மூலதனம் ரூபா 500 000
   (2) சொத்துக்கள் ரூபா 750 000 = மூலதனம் ரூபா 750 000
   (3) சொத்துக்கள் ரூபா 750 000 = மூலதனம் ரூபா 500 000 + பொறுப்பு ரூபா 250 000
   (4) சொத்துக்கள் ரூபா 750 000 = மூலதனம் ரூபா 250 000 + பொறுப்பு ரூபா 500 000

18. பின்வரும் விடயங்களில் இருந்து உரிமை அதிகரிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் ஒன்று
   (1) உரிமையாளர் சொந்த தேவை கருதி பற்றிய தொகை ரூ. 15 000
   (2) ரூ. 3000 மின்சாரக்கட்டணம் செலுத்துதல்
   (3) உரிமையாளர் இட்ட மேலதிக மூலதனம் ரூ. 10 000
   (4) ரூ. 30 000 பெறுமதியான இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது.

19. வணிகம் ஒன்றில் கடன்கொடுத்தோர் கணக்கு … (1)………… இருக்கின்ற போது பற்றுக்கணக்கு ………… (2) ….. காணப்படுகின்றது.
   மேலே தரப்பட்ட (1), (2) இற்குப் பொருத்தமான விடை
   (1) பொறுப்புக்கணக்கு, வருமானக்கணக்கு (2) பொறுப்புக்கணக்கு, செலவுக்கணக்கு
   (3) சொத்துக்கணக்கு , உரிமைக்கணக்கு (4) பொறுப்புக்கணக்கு , உரிமைக்கணக்கு

20. செலவு அதிகரித்தல், வரவு குறைதல் எனும் இரட்டைப் பதிவுத்தத்துவத்தை எடுத்துக்காட்டும் கணக்கு
(1) மூலதனக்கணக்கு
(2) கொடுத்த கழிவுக்கணக்கு
(3) காசுக்கணக்கு
(4) கொள்வனவுக் கணக்கு

21. கீழே X நிரலில் முதன்மை ஏடுகளும் Y நிரலில் கொடுக்கல் வாங்கல்களும் தரப்பட்டுள்ளது. இவற்றை இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடையைக் குறிப்பது

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. காசேடு | A – 100000 பெறுமதியான தளபாடம் கடனுக்கு வாங்கியது |
| 2. கொள்வனவு நாளேடு | B – கடன் விற்பனை ரூ. 20 000 |
| 3. விற்பனை நாளேடு | C - ரூபனிடம் கொள்வனவு ரூ. 40 000 |
| 4. பொதுநாட்குறிப்பேடு | D – பெற்ற பங்குலாபம் ரூ. 10 000 |

(1) ADCB (2) DCBA (3) CBAD (4) DABC

22. வணிகமொன்றில் இடம்பெற்ற ஒரு கொடுக்கல் வாங்கலும் அதனை பதிவதற்கு பயன்படுத்தப்பட்ட பூரணமற்ற இரட்டைப்பதிவும் கீழே தரப்பட்டுள்ளது.
ரூபா 25 000 மீதியாக காணப்பட்ட கடன்பட்டோர் ஒருவரிடம் இருந்து ரூபா 22 000 ஐ பெற்றுக்கொண்டதன் மூலம் கணக்குத் தீர்க்கப்பட்டது.

காசுக்கணக்கு வரவு 22 000

….(1)…. கணக்கு வரவு ….(2)…..

கடன்பட்டோர் கணக்கு – செலவு ….(3)….

மேலே தரப்பட்ட (1), (2), (3) ஆகிய இடைவெளிகளில் இடம்பெறக்கூடிய சொல் மற்றும் தொகைகளை சரியாகக் காட்டும் விடை

| | | |
|---|---|---|
| (1) கொடுத்த கழிவு | ரூபா 3000 | ரூபா 25 000 |
| (2) பெற்ற கழிவு | ரூபா 3000 | ரூபா 25 000 |
| (3) கொடுத்த கழிவு | ரூபா 3000 | ரூபா 22 000 |
| (4) பெற்ற கழிவு | ரூபா 3000 | ரூபா 22 000 |

23. தருண் வணிகத்தின் 2021 ஆகஸ்ட் மாதத்திற்கான வங்கிக்கூற்றின் செலவு மீதி ரூபா 25 000 ஆகும். இது
(1) வணிகத்தின் சொத்தாகும்
(2) வணிகத்தின் பொறுப்பாகும்
(3) வங்கியின் சொத்தாகும்
(4) வணிகத்தின் வங்கி மேலதிகப்பற்றாகும்.

24. 31.07.2021 இல் இருந்தவாறான வங்கிக்கணக்கு மீதி வரவில் ரூ. 15600 ஐக் காட்டியது. வங்கிக்கூற்று மீதி ரூ. 15100 ஐக் காட்டியது. இவ் வேறுபாட்டிற்கான காரணமாக அமைவது
(1) வங்கிக்கு சமரப்பிக்கப்படாத காசோலை ரூ. 500
(2) நேரடியாக பெற்ற பங்குலாபம் ரூ. 500
(3) நிலையியற் கட்டளையின் பெயரில் வங்கி செலுத்திய காப்புறுதிக்கட்டணம் ரூ. 500
(4) நேரடி வைப்பு ரூ. 500.

25. கடன்பட்டோர் ஒருவரிடம் இருந்து வணிகத்திற்கு கிடைத்த ரூபா 5000 காசோலை ஒன்று அச்சந்தர்பத்திலே வைப்புச் செய்யப்பட்டால் அதற்கான இரட்டைப்பதிவு எவ்வாறு அமையும்

| | |
|---|---|
| (1) காசுக்கணக்கு வரவு ரூ. 5000 | கடன்பட்டோர் கணக்கு – செலவு ரூ. 5000 |
| (2) வங்கிக்கணக்கு வரவு ரூ. 5000 | கடன்பட்டோர் கணக்கு – செலவு ரூ. 5000 |
| (3) கடன்பட்டோர் கணக்கு வரவு ரூ. 5000 | காசுக்கணக்கு – செலவு ரூ. 5000 |
| (4) கடன்பட்டோர் கணக்கு – வரவு ரூ. 5000 | விற்பனைக் கணக்கு – செலவு ரூ. 5000 |

26. வணிகமொன்றில் 2021 ஒக்டோபர் மாத சில்லறைச் செலவு ரூ. 1900 ஆகும். ஒக்டோபர் மாத இறுதியில் சில்லறைக் காசேட்டு மீதி ரூ. 100 ஆக இருந்தது. 2021 நவம்பர் மாதம் முதல் சில்லறைக் காசு வசக்கட்டினை ரூ. 1000 இனால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டது. 01.11.2021இல் சில்லறைக்காசு வசக்கட்டு மீள் நிரப்பல் தொகை யாது?.

(1) ரூ. 1000 (2) ரூ. 1900 (3) ரூ. 2900 (4) ரூ. 3000

27. வணிகமொன்றின் கணக்கீட்டு வருடம் ஒன்றின் முடிவில் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் வெளிக்காட்டாத வழுவாகக் கருதக்கூடியது.

(1) ரூ. 2500 காசு விற்பனை காசுக்கணக்கில் மட்டும் பதியப்பட்டது.
(2) கடன் கொடுத்தோருக்கு கொடுப்பனவு செய்த போது பெறப்பட்ட கழிவு ரூ. 600 பெற்ற கழிவுக்கணக்கில் பதியப்படவில்லை.
(3) கடன் கொள்வனவுகள் ரூ. 65000 கொள்வனவு நாட்குறிப்பில் சரியாக பதியப்பட்டது. ஆனால் கடன் கொடுத்தோர் கணக்கில் ரூ. 60000 என செலவு வைக்கப்பட்டது.
(4) செலுத்தப்பட்ட காப்புறுதிக்கட்டணம் ரூ. 2500 காசுக்கணக்கில் சரியாக பதியப்பட்டது. ஆனால் இறைவரிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

28. வணிகத்தின் மின்சாரக்கட்டணம் ரூ. 9000 செலுத்தப்பட்ட போதும் மின்சாரக் கட்டணக் கணக்கில் ரூ. 900 என வரவு வைக்கப்பட்டது. இவ்வழுவை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு

(1) மின்சாரக்கட்டணக் கணக்கு – வரவு ரூ. 8100
    காசுக்கணக்கு – செலவு ரூ. 8100
(2) மின்சாரக் கட்டணக்கணக்கு – வரவு ரூ. 8100
    தொங்கல் கணக்கு – செலவு ரூ. 8100
(3) மின்சாரக்கட்டணக்கணக்கு – வரவு ரூ. 9000
    தொங்கல் கணக்கு – செலவு ரூ. 9000
(4) தொங்கல் கணக்கு – வரவு ரூ. 9000
    மின்சாரக் கணக்கு – செலவு 9000

29. பின்வருவனவற்றுள் கலைமதி விளையாட்டுக் கழகத்தின் வருமான செலவுக் கணக்கில் உள்ளடக்கப்படாத கொடுக்கல் வாங்கல் எது?.

(1) விளையாட்டு உபகரண கொள்வனவு ரூ. 15000
(2) செய்தி பத்திரிகைகளை விற்பனை செய்து பெற்ற பணம் ரூ. 1000
(3) செலுத்திய போக்குவரத்து செலவு - ரூ. 500
(4) பெற்ற நன்கொடை ரூ. 2500

30. சலீம் விளையாட்டுக்கழகம் 100 அங்கத்தவர்களை கொண்டுள்ளதுடன் ஒவ்வொரு அங்கத்தவருக்குமான மாதாந்த அங்கத்துவக்கட்டணம் ரூ. 50 ஆகும். 31.12.2021இல் முடிவுற்ற வருடத்துக்காக 70 அங்கத்தவர்களிடம் வருடாந்த அங்கத்துவக் கட்டணம் பெறப்பட்டிருந்தது. 31.12.2021இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான கூற்றில் காட்டப்பட வேண்டிய அங்கத்துவக் கட்டணம்

(1) ரூ. 35000 (2) ரூ. 50000 (3) ரூ. 42000 (4) ரூ. 60000

31. குறித்த நிதி ஆண்டின் விற்பனைக்கிரயம் கணிப்பிடுவதற்கான சமன்பாடாக அமைவது

(1) விற்பனைக் கிரயம் + ஆரம்ப இருப்பு
(2) விற்பனைக்குத் தயாரான இருப்பு + இறுதி இருப்பு
(3) விற்பனைக்குத் தயாரான இருப்பு - இறுதி இருப்பு
(4) ஆரம்ப இருப்பு + கொள்வனவு

32. 2021.12.31ஆம் திகதியில் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதியில் மின்கட்டணமாக ரூ. 12000 பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்பில் அட்டுறு மின்சாரம் ரூ. 1200 எனக் காட்டப்பட்டிருந்தது. இவ்வணிகத்தின் வருடாந்த மின்சாரக்கட்டணம் எவ்வளவு?.

(1) ரூ. 1200 (2) ரூ. 10800 (3) ரூ. 12000 (4) ரூ. 13200

33. பூச்சாடிகளைத் தயாரிக்கும் வணிகமொன்றின் 2021 செப்ரெம்பர் மாத மொத்த உற்பத்திக்கிரயம் ரூ. 120 000 ஆகும். இம்மாதத்தில் 500 பூச்சாடிகள் தயாரிக்கப்பட்டன. பூச்சாடி ஒன்றின் உற்பத்திக்கிரயத்தின் மீது 20% இலாப எல்லை பேணப்படின் பூச்சாடி ஒன்றின் விற்பனை விலை யாது?.

(1) ரூ. 250 (2) ரூ. 300 (3) ரூ. 288 (4) ரூ. 500

Education
கல்வி
අධ්‍යාපන

34. வணிகமொன்றின் பொருள் உற்பத்தியின் போது ஒவ்வொரு அலகு தொடர்பிலும் தெளிவாக இனங்காணக்கூடிய பௌதீக வளங்களின் பெறுமானத்தைக் குறிப்பது
(1) நேர் செலவு (2) மூலச்செலவு
(3) நேரில் பொருள் செலவு (4) நேர்பொருள் செலவு

35. வணிகமொன்று 01.01.2021இல் இயந்திரம் ஒன்றை ரூ. 500 000ற்கு கொள்வனவு செய்தது. இவ் இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும். இதன் எஞ்சிய பெறுமதி ரூ. 50 000 ஆகும். 31.12.2021இல் முடிவடைந்த ஆண்டுக்கான இயந்திர பெறுமானத் தேய்வுத் தொகை யாது?.
(1) ரூ. 90 000 (2) ரூ. 100 000 (3) ரூ. 180 000 (4) ரூ. 320 000

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 36 – 40 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

டில்சான் வணிகத்தின் 31.12.2021 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காக தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதி வருமாறு.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனம் | | 300 000 |
| ஆரம்ப இருப்பு | 5000 | |
| கொள்வனவும் விற்பனையும் | 80 000 | 200 000 |
| 10% வங்கிக்கடன் | | 20 000 |
| விநியோகவான் (கிரயம்) | 200 000 | |
| விநியோகவான் பெறுமானத்தேய்வு ஏற்பாடு (01.01.2021இல்) | | 20 000 |
| காப்புறுதி | 2 000 | |
| பெற்ற தரகு | | 4 000 |
| விற்பனை ஊழியர் சம்பளம் | 30 000 | |
| வங்கிக்கடன் வட்டி | 2 000 | |
| கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் | 12 000 | 11 000 |
| அறவிடமுடியாக்கடன் | 1 000 | |
| நிர்வாகச் செலவு | 40 000 | |
| வங்கி மேலதிகப் பற்று | | 16 000 |
| காசு | 199 000 | |
| | 1071 000 | 1071 000 |

**மேலதிக தகவல்கள்**

- 31.12.2021இல் இருப்புக்கள் ரூ. 2000
- விநியோக வானுக்கு கிரயத்தில் 10% பெறுமானத் தேய்வு செய்தல் வேண்டும்.

36. இவ்வணிகத்தின் 31.12.2021இல் முடிவுற்ற ஆண்டில் விநியோக வான் பெறுமானத் தேய்வாக காட்டப்பட வேண்டிய தொகை
(1) ரூ. 20 000 (2) ரூ. 40 000 (3) ரூ. 180 000 (4) ரூ. 60 000

37. இவ்வணிகத்தின் நடைமுறை சொத்துக்களைக் கொண்ட விடை
(1) கடன்கொடுத்தோர், காசு, கட்டடம்
(2) கடன்பட்டோர், வங்கிமேலதிகப் பற்று, காசு
(3) இறுதி இருப்பு, விநியோக வான், காசு
(4) கடன்பட்டோர், காசு, இறுதி இருப்பு

38. இவ்வணிகத்தின் 31.12.2021இல் மொத்த இலாபம்
(1) ரூ. 115 000 (2) ரூ. 117 000 (3) ரூ. 120 000 (4) ரூ. 125 000

39. 31.12.2021இல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய இலாபம்
(1) ரூ. 20 000 (2) ரூ. 45 000 (3) ரூ. 29 000 (4) ரூ. 26 000

40. இவ்வணிகத்தின் 31.12.2021 ஆம் திகதியில் உள்ளவாறான உரிமையின் பெறுமதி
(1) ரூ. 324 000 (2) ரூ. 417 000 (3) ரூ. 332 000 (4) ரூ. 326 000

# பகுதி II

**அறிவுறுத்தல்:-**
**முதலாம் வினா உட்பட, பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01. தந்தையின் வியாபாரம் தொடர்பான அனுபவத்தைக் கொண்ட பவன் தனது சேமிப்பில் இருந்த ரூபா 800 000 யும் தனக்கு சொந்தமான ரூபா 500 000 பெறுமதியான மோட்டார் வாகனத்தையும் 12% வங்கிக்கடன் ரூபா 200 000 யும் கொண்டு கட்டடப்பொருள் விற்பனை வணிகத்தை கட்டட ஒப்பந்தக்காரர் அதிகம் உள்ள இடத்தில் **சிவன் கட்டடப் பொருள் வாணிபம்** எனும் பெயரில் 01.01.2021ல் ஆரம்பித்தார். அன்றைய தினத்தில் இரு ஊழியர்களை தலா ரூ. 20 000 மாதச் சம்பளத்தில் சேர்த்துக்கொண்டார். இவரது வணிகத்தின் கட்டடப் பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்வதனால் அண்மையில் உள்ள பாடசாலைகளும், கட்டட ஒப்பந்தக்காரர்களும் அதிகம் கொள்வனவு செய்கின்றனர்.

**2021 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.**

| | |
|---|---|
| கட்டடப் பொருள் கொள்வனவு | |
| காசு | ரூ. 200 000 |
| கடன் | ரூ. 150 000 |
| கட்டட வாடகை செலுத்தியது | ரூ. 18 000 |
| சென்மதி மின்கட்டணம் | ரூ. 12 000 |
| கட்டடப் பொருள் விற்பனை | |
| காசு | ரூ. 400 000 |
| கடன் | ரூ. 120 000 |
| சம்பளம் செலுத்தியது | ரூ. 20 000 |
| வங்கிக்கடன் வட்டி | ரூ. 1 000 |

**மேலதிக தகவல்கள்**

- கடன்பட்டோரிடம் 8% கழிவு கொடுத்து மிகுதிப்பணம் பெறப்பட்டது.
- மோட்டார் வாகனத்திற்கு 12% பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டும்.
- 31.01.2021இல் கட்டட அரிகல்லை உற்பத்தி செய்வதற்காக புதிய இயந்திரமொன்றை இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்ய தீர்மானித்தார்.

(i) (அ) சிவன் கட்டடப் பொருள் வாணிபத்தினால் நிறைவேற்றப்படும் மனித தேவை யாது?
(ஆ) மேலே (i) (அ) ல் மேற்படி வணிகத்தினால் மனித தேவை நிறைவேற்றப்படும் விதத்தினை விளக்குக.

(ii) சிவன் கட்டடப் பொருள் வாணிபத்தில் உள்ள பின்வரும் உற்பத்திக் காரணிகளுக்கு உதாரணம் தருக.

| **உற்பத்தி காரணி** | **உதாரணம்** |
|---|---|
| மூலதனம் | ………………………… |
| உழைப்பு | ………………………… |

(iii) (அ) மேற்படி வணிகத்தின் பலம் ஒன்றையும் வாய்ப்பு ஒன்றையும் தருக.
(ஆ) மேற்படி சம்பவத்தில் உள்ள அரச நிறுவனம் எது?

(iv) அ) முகாமைத்துவக் கருமங்களான திட்டமிடல், ஒழுங்கமைத்தல் ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.
(ஆ) சந்தைப்படுத்தல் கலவை மாறிகளான பொருள், விலை ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

(v) (அ) சிவன் கட்டடப் பொருள் வணிகத்தில் 01.01.2021 இல் உள்ள மூலதனம் யாது?
(ஆ) மேற்படி வணிகத்தில் 01.01.2021 இல் உள்ள சொத்துக்கள் இரண்டு தருக.

(vi) (அ) மேற்படி வணிகம் பயன்படுத்தும் மூல ஏடுகள் இரண்டையும் மூல ஆவணங்கள் இரண்டையும் தருக.
(ஆ) மேற்படி சம்பவத்தில் இடம்பெற்றுள்ள கடன் விற்பனைக்கான இரட்டைப்பதிவினை பெறுமதியுடன் தருக.

(vii) (அ) கடன்பட்டோருக்கு வழங்கப்பட்ட கழிவுத்தொகை யாது?

(ஆ) மேற்படி கொடுத்த கழிவுக்கான இரட்டைப்பதிவினை தருக.

(viii) (அ) செலுத்த வேண்டிய சம்பளம் யாது?

(ஆ) இதற்கான இரட்டைப்பதிவினை தருக?

(ix) காசேட்டினை தயாரித்து மீதியைக் காண்க?

(x) மேற்படி வணிகத்தில் 31.01.2021 ல் கிடைத்த தேறிய இலாபத்தைக் கணிக்க?

(20 புள்ளிகள்)

**வணிகக்கல்வி**

**(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக)**

(02)(i) (அ) உற்பத்தியின் தன்மை அடிப்படையில் வணிகங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களின் தனித்துவமான குணாம்சங்கள் 2 தருக?

(02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா எனக் குறிப்பிடுக.

(அ) தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவது வணிகமொன்றின் பிரதான நோக்கமாகும். (……..)

(ஆ) முகாமையாளரிடம் காணப்படும் விசேட முகாமைத்துவத் திறன்கள் வணிகத்திற்கு வாய்ப்பாகும்.(…)

(இ) அழகுக்கலை நிறுவனங்கள் சேவை உற்பத்தி வணிகமாகும். (…….)

(ஈ) கணக்காய்வாளர்கள், கணக்காளர்கள் என்போர் உள உழைப்பை வழங்குபவர்களாவர். (…….)

(02 புள்ளிகள்)

(iii)'தனுஸ் Mobile shop' எனும் பெயரில் யாழ்ப்பாண நகரின் மையத்தில் கையடக்கத் திருத்தும் நிறுவனம் ஒன்றை வைத்திருக்கும் தனுஸன் என்பவர் வாடிக்கையாளர் எண்ணிக்கை அதிகரித்தமையால் இரு ஊழியர்களைப் பணிக்கமர்த்தியிருந்தார்.

(அ) மேற்படி வணிகத்தில் அக்கறை உள்ள தரப்பினர் இருவரை உதாரணத்துடன் தருக.

(ஆ) நவீன கையடக்கத் தொலைபேசிகளின் உருவாக்கம் உள்ளடங்கும் சூழல் யாது?.

(02 புள்ளிகள்)

(iv) நகுலன், சரவணன் என்போர் சைக்கிள் விற்பனையகமொன்றை பங்குடைமையாக நடத்துகின்றனர். இவர்கள் நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்ட, சட்ட ஆளுமை கொண்ட அமைப்பாக தமது வணிகத்தை மாற்ற எண்ணுகின்றனர்.

(அ) இவர்களுக்குப் பொருத்தமான வணிக அமைப்பு யாது?

(ஆ) இவ்வமைப்பு பதிவு செய்தல் தொடர்பான சட்டம் எது?

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

(03) (i) (அ) வணிக வங்கியொன்றில் ஏற்படுத்தக்கூடிய வைப்புக்கள் இரண்டு தருக?

(ஆ) யாழ்ப்பாணத்திலிருந்து தம்புள்ளை வர்த்தக மையத்திற்கு வெங்காயத்தை அனுப்பும் விவசாயி ஒருவர் பொருத்தமான போக்குவரத்து ஊடகத்தைத் தெரிவு செய்யும் போது கருத்தில் கொள்ளும் விடயங்கள் இரண்டு தருக?

(02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா எனக் குறிப்பிடுக.

(அ) இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கினை ஏற்படுத்த முடியாது. (…….)

(ஆ) சிறப்புமுறைக் குறுக்குக் கோடிடலில் ஏதாவது ஒரு வங்கியொன்றின் பெயர் இருக்கமுடியும். (…….)

(இ) வாகனச் சாரதி ஒருவர் தன்னிடம் கட்டாயம் வைத்திருக்க வேண்டியது மூன்றாம் நபர் காப்புறுதிப் பத்திரமாகும். (…….)

(ஈ) தொடர்பாடல் செயன்முறையில் மீள்வலியுறுத்தல் என்பது அனுப்புபவர் பெறுபவரிடமிருந்து பெறுவதாகும். (……)

(02 புள்ளிகள்)

(iii) இலங்கை வங்கியில் கணக்குள்ள சிவாவிடம் 'பெறுவோன் கணக்கு மட்டும்' எனக் குறுக்குக் கோடிட்ட காசோலையை தனது பெயரில் பெற்ற குமரன் அதனை இலங்கை வங்கிக் கருமபீடத்தில் மாற்ற முயன்ற போது கருமபீடத்தில் மாற்றமுடியாது என வங்கி அலுவலரினால் அறிவுறுத்தப்பட்டது.

(அ) கருமபீடத்தில் காசோலையை மாற்றமுடியாமல் போனமைக்கான காரணம் யாது?

(ஆ) அதனை காசாக்க அவருக்கு நீர் கூறும் ஆலோசனை யாது? (02 புள்ளிகள்)

(iv) யாழ்ப்பாணத்தில் உள்ள பரமநாதன் கொழும்பில் உள்ள தனது உறவினருக்கு புகையிரதம் மூலம் தேங்காய்களை அனுப்பிவைத்தார்.

(அ) மேற்படி சம்பவத்தில் போக்குவரத்து மூலங்களுக்கு உதாரணம் தருக?

(ஆ) புகையிரதப் போக்குவரத்தின் பிரதிகூலங்கள் 2 தருக?

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

(04) (i) (அ) திறைசேரி உண்டியல் என்பது யாது?

(ஆ) சந்தைப்படுத்தல் கலவை மாறிகள் 2 தருக?

(02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா எனக் குறிப்பிடுக.

(அ) நியாயமான விலையைக் குறித்தலானது சந்தைப்படுத்தல் நடவடிக்கையாகும். (…….)

(ஆ) முகாமைத்துவக் கருமங்கள் தொடர்ச்சியாக இடம்பெறக்கூடியவையாகும். (…….)

(இ) வணிகத்திலுள்ள மனித வளங்களை சிறப்பாக வழிப்படுத்தல் கட்டுப்படுத்தலாகும். (……)

(ஈ) கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் சந்திக்கின்ற குறித்த இடம் சந்தையாகும். (……)

(02 புள்ளிகள்)

(iii) நெழுக்குளம் மகாவித்தியாலய மாணவர்கள் 3ம் தவணை விடுமுறைக் காலத்தில் கல்விச்சுற்றுலா செல்வதற்குத் தீர்மானித்தார்கள். இதற்கான மாணவக்குழுக்கள் நியமிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

(அ) இங்கு கூறப்பட்ட முகாமைத்துவக் கருமங்கள் 2 தருக?

(ஆ) அவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக?

(02 புள்ளிகள்)

(iv) அற்லஸ் நிறுவனம் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கு வணிகமும் கணக்கீட்டு கல்வியும் பாட மாதிரி வினாத்தாள் புத்தகமொன்றை அச்சிட்டு நியாயமான விலைக்கு விற்பனை செய்தது.

(அ) மேற்படி சம்பவத்தில் அற்லஸ் நிறுவனத்தின் இலக்குச்சந்தை யாது?

(ஆ) மேற்படி சம்பவத்தில் சந்தைப்படுத்தல் கலவை மாறியொன்றினைக் குறிப்பிட்டு உதாரணம் தருக.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

## பகுதி ஆ

(05) (i) (அ) கொடுக்கல் வாங்கலின் விளைவாக உருவாகும் கணக்கீட்டுக் கூறுகள் 2 தருக?

(ஆ) உரிமையில் பற்றுத் தவிர்ந்த குறைவினை ஏற்படுத்தும் விடயம் எது?

(02 புள்ளிகள்)

(ii) பின்வருவனவற்றிற்கு இரட்டைப்பதிவினை எழுதுக.

(அ) பல்பொருள் வியாபார நிலையமொன்று டேவிட் பீரிஸ் நிறுவனமிடமிருந்து ரூபா 500 000 பெறுமதியான மோட்டார் வாகனம் வாங்கியது.

(ஆ) மீள் விற்பனைப் பொருட்கள் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது ரூ. 40 000.

(02 புள்ளிகள்)

(iii) சாரதா நிறுவனத்தின் கணக்கீட்டுச் சமன்பாடு 01.01.2021ல் வருமாறு.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சொத்துக்கள் | | | = | உரிமை | + | பொறுப்புக்கள் |
| இருப்பு + | கடன்பட்டோர் + | காசு | = | உரிமை | + வங்கிக்கடன் | + கடன்கொடுத்தோர் |
| (1) + 40 000 | | | = | | | + 40 000 |
| (2) - 20 000 | + 20 000 | | | | | |
| (3) | | | = | + 50 000 | -50 000 | |
| (4) | | + 7000 | = | + 7000 | | |
| | | (பெற்ற தரகு) | | | | |

மேற்காட்டிய மாற்றங்களுக்கான கொடுக்கல் வாங்கல்களை பெறுமதிகளுடன் எழுதுக.

(4 புள்ளிகள்)

(iv) சரன் வணிகத்தின் 2022 ஜனவரி மாத சில்லறைக் காசுக் கொடுக்கல் வாங்கல் வருமாறு.

| | |
|---|---|
| 01.01.2022 இல் மீதி | ரூ. 250 |
| சில்லறைக் காசுக் கட்டுநிதி | ரூ. 5000 |
| ஜனவரி 01 இல் சில்லறைச் செலவுகள் மீள்நிரப்பப்பட்டன. | |
| 03.01.2022ல் தபால் கட்டணம் | ரூ. 1200 |
| 07.01.2022ல் உபசரணை | ரூ. 400 |
| 12.01.2022ல் எழுதுபொருள் | ரூ. 300 |
| 15.01.2022ல் முத்திரை வாங்கியது | ரூ. 150 |
| 20.01.2022ல் தனத்திற்குக் கொடுத்தது | ரூ. 1100 |
| 22.01.2022ல் சுத்திகரிப்பு | ரூ. 350 |
| 26.01.2022ல் தேநீர் செலவு | ரூ. 400 |
| 28.01.2022ல் எழுதுபொருள் செலவு | ரூ. 600 |

பெப்ரவரி 01 இல் மீள்நிரப்பல் இடம்பெற்றது.

தபால் கட்டணம், எழுதுபொருள் செலவு, உபசரணை, நானாவிதச் செலவு, பேரேட்டுக் கணக்கு எனும் பகுப்பாய்வு நிரல்களைக் கொண்டு 2022 ஜனவரி மாத சில்லறைக் காசேட்டைத் தயார் செய்க. (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

(06) (i) (அ) காசேட்டின் இரு தொழிற்பாடுகளையும் தருக? (01 புள்ளி)

(ஆ) பரீட்சை மீதி தயாரிப்பதன் நோக்கங்கள் 2 தருக? (01 புள்ளி)

(ii) கரன் வணிகத்தின் 31.12.2021 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்படவில்லை. வேறுபாடாகிய ரூ.6000 தொங்கல் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

(அ) பரீட்சை மீதியின் செலவு நிரலின் கூட்டுத்தொகை ரூ.112 000 என இருப்பின் வரவு நிரலின் கூட்டுத்தொகை யாது? (01 புள்ளி)

(ஆ) பரீட்சை மீதியின் சமப்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் வழுக்களில் பரீட்சை மீதியைத் தயாரிக்கும் போது வழுக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக? (01 புள்ளி)

(iii) தனம் வணிகத்திற்கு 31.12.2021 இல் கிடைக்கப்பெற்ற வங்கிக்கூற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்கள்

| | |
|---|---|
| 01.12.2021 செலவு மீதி | ரூ.17 000 |
| **வைப்புக்கள்** | |
| 03.12.2021 காசு | ரூ.20 000 |
| 08.12.2021 காசோலை இல - 603212 | ரூ.18 000 |
| 17.12.2021 நேரடி வைப்பு | ரூ.40 000 |
| **கழிப்புக்கள்** | |
| 05.12.2021 வாடகை (காசோலை இல 721801) | ரூ.6 000 |
| 19.12.2021 மகேசன் (காசோலை இல 721804) | ரூ.32 000 |
| 27.12.2021 காசோலை புத்தகக் கட்டணம் | ரூ.2 000 |

(அ) 2021 டிசம்பர் மாத வங்கிக்கூற்றினைத் தயாரிக்க.

(ஆ) மேலுள்ள தகவலின்படி வங்கிக்கணக்கை செம்மையாக்கப் பயன்படும் உருப்படிகள் 2 தருக?

(04 புள்ளிகள்)

(iv) பரஞ்சோதி கைப்பை உற்பத்தி வணிகத்தின் 2021 ஜுன் மாத நடவடிக்கைகள் வருமாறு.

| | |
|---|---|
| தோல் பொருள் கொள்வனவு | ரூ. 90 000 |
| கைப்பை தயாரிப்பாளர் சம்பளம் | ரூ. 30 000 |
| button, zips வாங்கியது | ரூ. 8 000 |
| மின் கட்டணம் | ரூ. 12 000 |
| மாத வாடகை | ரூ. 10 000 |
| தையல் இயந்திரத் திருத்தம் | ரூ. 10 000 |

சகல பொருட்களையும் பயன்படுத்தி ஜுன் மாதத்தில் கைப்பைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

(அ) 30.06.2021 இல் முடிந்த மாதத்திற்கான உற்பத்திக் கிரய அட்டவணையைத் தயாரிக்க. (02 புள்ளிகள்)

(ஆ) மூலக்கிரயம் யாது? (01 புள்ளி)

(இ) கைப்பையொன்றின் அலகுக் கிரயம் ரூ.800 எனின் ஜுன் மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கைப்பைகளின் எண்ணிக்கையைக் காண்க. (01 புள்ளி)

(மொத்தம் 12 புள்ளிகள்)

(07) (i) (அ) அறவிடமுடியாக்கடன் தொகையானது கடன்பட்டோர் கணக்கில் செலவு வைப்பதற்கான காரணம் யாது? (01 புள்ளி)

(ஆ) இலாப நோக்கற்ற நிறுவனங்களின் பிரதான வருமான மூலம் எது? (01 புள்ளி)

(ii) வளர்மதி விளையாட்டுக்கழகத்தில் 240 அங்கத்தவர்கள் உள்ளனர். அங்கத்தவர் வருடாந்த சந்தா ரூ.500 ஆகும்.

2021 ம் ஆண்டு தகவல்கள் வருமாறு.

- 60 அங்கத்தவர்கள் 2021 ம் ஆண்டு சந்தா செலுத்தவில்லை. மிகுதி அங்கத்தவர்கள் 2021 ஆம் சந்தாவை செலுத்தியுள்ளனர்

(அ) 2021 இல் சந்தா மூலம் பெற்ற பணம்? (01 புள்ளி)

(ஆ) 2021 இல் நிலுவைச் சந்தா யாது? (01 புள்ளி)

LMDUnit Education கல்வி අධ්‍යාපන

(iii) சுவர்ணா வணிகத்தின் 31.12.2021 இல் பரீட்சை மீதி வருமாறு.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனம் | | 500 000 |
| இயந்திரம் (கிரயத்தில்) | 300 000 | |
| இயந்திர பெறுமானத் தேய்வு ஏற்பாடு (01.01.2021ல்) | | 120 000 |
| சரக்கிருப்பு (01.01.2021ல்) | 40 000 | |
| கொள்வனவுகள் | 170 000 | |
| விற்பனைகள் | | 310 000 |
| கடன்பட்டோர் | 50 000 | |
| கடன்கொடுத்தோர் | | 45 000 |
| மின் கட்டணம் | 8 000 | |
| பெற்ற கழிவு | | 4 000 |
| நிலையான வைப்பு 20% | 400 000 | |
| கொடுத்த கழிவு | 3 000 | |
| விளம்பரம் | 9 000 | |
| 24% வங்கிக்கடன் | | 100 000 |
| தொலைபேசிக் கட்டணம் | 11 000 | |
| வங்கிக்கடன் வட்டி | 16 000 | |
| நிலையான வைப்பு வட்டி வருமானம் | | 60 000 |
| காசு மீதி | 132 000 | |
| | 1139 000 | 1139 000 |

மேலதிக தகவல்கள்

- 31.12.2021 ல் இருந்தவாறு சரக்கிருப்பு ரூ.36 000.
- இயந்திரங்களுக்கு 20% பெறுமானத் தேய்வு செய்யப்படல் வேண்டும்.
- 31.12.2021 ல் அட்டுறு மின்கட்டணம் ரூ.3 000 ஆகும்.

**வேண்டப்படுவது**

(அ) 31.12.2021இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக்கூற்று (04 புள்ளிகள்)

(ஆ) 31.12.2021இல் இருந்தவாறான நிதிநிலைமைக்கூற்று (04 புள்ளிகள்)

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**
**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page